# 26. மாயூரம் விஸ்வநாதசாஸ்திரிகள், சிவயோகசுவாமிகள் ஆகிய இசையாளர்களின் பாடல்கள் தேசப்பற்றை மக்களுக்கு உணர்த்தியுள்ளமை.

**கிருபாசக்தி கருணா,**
முனைவர் பட்டஆய்வாளர்.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

**முன்னுரை:**

இசையும் பாடல்களும் அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கையிலும் ஒருமுக்கிய பங்கு வகிக்கிறது. அனைத்து விழாக்கள், இறைவழிபாடு, விளையாட்டு சம்பந்தப்பட்ட விழாக்கள் மற்றும் அரசியல் விழாக்களிலும் தவிர்க்க முடியாத பங்கினை இசையும் பாடல்களும் வகிக்கின்றன. அந்தவிதத்தில் ஒரு நாட்டில் மக்களுக்குள்ள பற்று, விடுதலை உணர்வு, சுதந்திர தாகம் ஆகியவற்றைத் தூண்டக்கூடய தேசப்பற்றுப் பாடல்களைத் தந்த இசையாளர்கள், கவிகள் முக்கியமானவர்கள். தத்தம் மொழிகளில் தமது பாடல்களூடாகத் தேசப்பற்றினை மக்களிடையே உண்த்திய பாடல்களை யாத்த இசையாளர்கள் மயூரம் விஸ்வநாதசாஸ்திரிகள், சிவயோகசுவாமிகள் போற்றப்பட வேண்டியவர்கள். இவர்களுடைய பாடல்கள் தேசப்பற்றினை மக்களுக்கு உணர்த்தியுள்ள விதம் இவ்ஆய்வினூடாகப் புலப்படுத்தப்படுகிறது.

**மயூரம் விஸ்வநாதசாஸ்திரிகள்:**

இந்தியாவில் தமிழ்நாட்டில் மாயவரம் எனும் ஊரில் ராமசுவாமி கணபாடிகள், பாலாம்பாள் லஷ்மி ஆகியோருக்கு 27.11.1893 அன்று பிறந்தவர் மயூரம் விஸ்வநாதசாஸ்திரிகள். ஆரம்பத்தில் ஆங்கிலம், சம்ஸ்கிருதம் கற்றுப் பின்னர் இவரது இசைப் பயிற்சி தனது தாயாரிடம் ஆரம்பமாகியது. பின்னர் இவரின் இசை ஆர்வத்தின் மேலீட்டால் மிகப் பெரிய வித்துவான்களிடம் இசையைக் கற்கும் வாய்ப்புக் கிட்டியது. பின்னர் ஆர்மோனியம் கற்றுக் ஹரிகதைகள் செய்ய ஆரம்பித்தார். இவ்வாறு வளர்ந்துவரும் போது 1929இல் சங்கீத அக்கடமியால் நடத்தப்பட்ட ஒரு இசைப் போட்டியில் வாக்கேயகாரருக்குரிய முதலாவது அங்கீகாரம் கிடைத்தது. இப்போட்டியில் சாஸ்திரிகளால் சம்ஸ்கிருதத்தில் தோடி இராகத்தில் பாரதமாதாமேல் இயற்றப்பட்ட "காமிதே கருணாமிதே.." என்ற பாடல் டைகர் வரதாச்சாரியார் அடங்கியசபையால் முதற்பரிசிற்காகத் தெரிவு செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழில் முருகன் பெயரில் நிறையப் பாடல்களும் வேறு கடவுள் மேலில் பாடல்களும் முக்கயமாகத் தேசபக்திப் பாடல்களும் இயற்றியுள்ளார். பின்னர் இவரதுபாடல்கள் கிட்டத்தட்ட 6நூல்களாக வெளிவந்துள்ளன. வெளியிடப்படாத பிரசுரங்களாக 5 தொகுதிகள் உள்ளன.

இவரால் தமிழில் இயற்றப்பட்ட தேசபக்திப் பாடல்கள் "தேசிய ஜெய கீதம்" என்ற பெயரில் நூலாக 1947 இல் வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட 18 பாடல்கள் "பாரத் பஜன்" பெயரில் நூலாக 1948 இல் வெளிவந்தது. இந்தப் பாடல்கள் சம்ஸ்கிருதத்தில் இயற்றப்பட்டிருந்தாலும் மிக எளிமையாகவும் பாரத மாதா, மகாத்மா காந்தி ஆகியோரைப் புகழ்வதாவும் கதிர் உடையைப் பற்றிய குறிப்புக்கள் அடங்குவதாவும் காணப்படுகின்றன. இவரால் இயற்றப்பட்ட "ஜெயதி ஜெயதி பாரத மாதா" என்ற பாடலுக்கு தேசிய கீதத்திற்குரிய இடம் கொடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் பின்வரும் பாடல்கள் மிகப் பிரபல்யம் வாய்ந்தவை

1. "ஸமரஸ பாவன பாரத ஸாம்ராஜ்ய..." என்ற பாடல் ஆபேரி இராகத்தில் பாடப்பட்டுள்ளது.
2. "பாரத ஸாம்ராஜ்யசுகி" என்ற பாடல் தேஸ் இராகத்தில் பாடப்பட்டுள்ளது.
3. "மங்களம் அவதுதே பாரத ஜனனி" என்ற பாடல் ஹமீர்கல்யாணி இராகத்தில் பாடப்பட்டுள்ளது.

இவருடைய தேசபக்திப் பாடல்கள் அனைத்தும் இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் மிகப் பிரபல்யமாகப் பாடப்பட்டன

**சிவயோகசுவாமிகள்:**

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் எனும் ஊரில் அம்பலவாணர், சின்னாச்சியம்மையார் ஆகியோருக்கு சதாசிவன் என்ற இயற்பெயருடன் 1872.05.29 அன்று பிறந்தவர் சிவயோகசுவாமிகள். ஆரம்பத்தில் ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்ற சுவாமிகள் கல்லூரிப் படிப்பை முடித்தபின்னர் நீர்ப்பாசனத் திட்டத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளராக அரசபணி புரியத் தொடங்கினார். அது ஓய்வுமிக்க பணி ஆகையால், வேலையைச் செம்மையாக முடித்ததும் ஓய்வு நேரத்தில் உண்மை நூல்கள் பலவற்றைக் கற்றதன் பயனாக செல்லப்பா சுவாமிகளின் சீடரானார். செல்லப்பா சுவாமிகள் தனது சீடரைப் பலவகை சோதனைகளுக்கு உள்ளாக்கி, பக்குவப்படுத்தி, மகாவாக்கியங்களை உபதேசித்தார். பின்னர் யோகர் சுவாமிகள் தனது அனுபவங்களையும் உபதேசங்களையும் "நற்சிந்தனைப் பாடல்களாக" வெளிப்படுத்தியுள்ளார். இப் பாடல்களில் 35 பாடல்கள் சென்னை, மாம்பலம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்ததீர்த்தசுவாமிகள் இயற்றி உதவிய ஸ்வரதாளக் குறிப்புக்களுடன் நூலாக வெளிவந்துள்ளது. இவரது நற்சிந்தனைப் பாடல்கள், பல கடவுளர் மேல் பாடப்பட்டதாகவும் பலபாடல்கள் இலங்கைநாட்டைப் போற்றிப் புகழ்ந்து பாடப் பெற்றதாகக் காணப்படுகிறது.

1. "இலங்கையானே" என்ற தலைப்பிலுள்ள பாடல் தொகுதியில் பின்வருமாறு தன் நாட்டைப் புகழ்ந்து பாடும் குறிப்புகள் காணப்படுகின்றன.
   மதில் சேர் இலங்கை மாநகரானே
   நேரும் இலங்கை நெல்வயலானே
   எண்ணில் வளஞ் சேரிலங்கையானே
   பூக்கும் இலங்கைப் பொன்னகரானே
   துன்னும் வரை சூழ் இலங்கையானே
   சுனைச் சேரிலங்கைத் தொன்னகரானே
   நீள ஆழி சூழ்ந்த நீள இலங்கை நெல்வயலானே
   வீழும் அருவி விளங்கும் இலங்கை
2. "இலங்கை என் திருநாடு" என்ற தலைப்பிலுள்ள பாடல் தொகுதியில் பின்வருமாறு தன் நாட்டைப் புகழ்ந்து பாடும் குறிப்புகள் காணப்படுகின்றன.
   செல்லாரும் பொழில் சூழும் இலங்கை என் திருநாடே
   தென்னை பனை சேரிலங்கை சிறியேன்றன் திருநாடே
   சீர்பெறூஉ மிலங்கை என் திருநாடு
   செறிபொழில் சூழிலங்கையே
   வற்றாத வளஞ்செறியும் இலங்கை என்திருநாடே
3. "யாழ்ப்பாணத்தானே" என்ற தலைப்பிலுள்ள பாடல் தொகுதியில் பின்வருமாறு யாழ்ப்பாணத்தைப் புகழ்ந்து வர்ணித்துப் பாடும் குறிப்புகள் காணப்படுகின்றன.
   இன்பந் தங்கும் யாழ்ப்பாணத்தானே

நீதி நின்றிடும் யாழ்ப்பாணத்தானே
நன்னலஞ் சேர் யாழ்ப்பாணத்தானே

4. "எங்கள் நாடு" என்ற தலைப்பிலுள்ள பாடல் தொகுதியில் பின்வருமாறு தன் நாட்டைப் புகழ்ந்து பாடும் குறிப்புகள் காணப்படுகின்றன.
அன்பர் பணிந்தேத்தி நிற்கும் நாடெங்கள் நாடு
ஆதியந்தமில்லாத நாடெங்கள் நாடு
இன்பதுன்பமில்லாத நாடெங்கள் நாடு
ஈசனொருவனெனும் நாடெங்கள் நாடு
உண்மை முழுதுமென்னும் நாடெங்கள் நாடு
எண்ணிக்கைக் கடங்காத நாடெங்கள் நாடு
ஏவாது பணி செய்யும் நாடெங்கள் நாடு

இவ்வாறு 33 வரிகள் காணப்படுகின்றன.

5. "இலங்கை என்னூர்" என்ற தலைப்பிலுள்ள பாடல் தொகுதியில் "எத்திசையும் மெச்சு புகழிலங்கை மேலோர்கள் வந்து தினம் நச்சு மிலங்கை", "நீடிய சீர் கொண்ட இலங்கை" போன்ற நாட்டை வர்ணிக்கும் குறிப்புகள் காணப்படுகின்றன.

6. "இலங்கை நகரானே" என்ற தலைப்பிலுள்ள பாடல் தொகுதியில்
கந்தம் பொலியும் இலங்கை
விண்டொடு வரைமேவிலங்கை
விண்ணோர் விரும்பு மிலங்கை
உவமை சொல்ல வொண்ணா லங்கை
கோலக் குயில் கூவுமிலங்கை

முடிவாக, பாடல்கள் ஊடாகவும் இசையூடாகவும் கருத்துக்களை மிக இலகுவாக மக்களிடையே புகுத்தலாம். இதனாலேயே இசையாளர்களும் கவிஞர்களும் தத்தம் மொழிகளில் இயற்றிய பாடல்களூடாகத் தேசப் பற்றினை மக்களுக்கு உணர்த்தியுள்ளனர். இந்த வகையில் மயூரம் விஸ்வநாதசாஸ்திரிகள், சிவயோகசுவாமிகள் இருவரும் தம் தேசப்பற்றினைப் பாடல்களூடாக மக்களுக்கு உணர்த்தியதுடன் தாமும் தேசப் பற்றாளர்களாகத் திகழ்ந்துள்ளார்கள்.

துணை நூற்பட்டியல்:

1. சிவதொண்டன் சபை,(1918),நற்சிந்தனை,சிவதொண்டன் சபை,யாழ்ப்பாணம்.
2. http://youtu.be/mfzkDwjP7cc.